59

பிஸ்மில்லாஹி.

# கீர்த்தனை மாலிகை.

இஃது

முனாஜாத்து மாலிகை, பதிக மாலிகை, முதலிய

நூற்களின், ஆசிரியரும்

மதுரைத்தமிழ்ச்சங்க வித்வானுமாகிய

கீழக்கரை ஸ்ரீமத் செ-மு.

**ஹாபிஸு, செய்யிது முகம்மது**

ஆலிம்புலவரவர்களால்

இயற்றப்பட்டு,

---

ஷெ யூர், வடக்குத்தெரு கனம்

**பி - ச - கா - வரிசை இபுறாகீம்**

அவர்களால்,

சென்னை-சூளை,

" ஸன் ஆப் இந்தியா பிரஸிற் "

பதிப்பிக்கப்பெற்றது.

ஹிஜ்ரி 1330-ஜமாதுல் அவ்வல் 22-க்குச் சரியான

கி - பி - 10 - 5 - 1912.

வெள்ளிக்கிழமை.

[...விலை] [அணா-3.

Q7:417
N12

## வாழ்த்துதற்பதிகம் விருத்தம்

தந்தைதமா ரெல்லாரு மவரவரின் றனையரெல்லாந் தகுதி பூண்டு
முந்தமா றவையகத்தி விருத்துவதே முறைமையெனு மொழியே நந்தஞ்
சொந்தமா யுலகிலுறுஞ் சுதர்களெல்லா மவ்வாறு துலங்கவைத்தே
சிந்துநேர் புகழுஜமால் முகியித்தீன் சாகிபுநீர் சிறந்து வாழி. (1)

ஈதலறன் றீவினைவிட் டீட்டல்பொருளெனுமொழியை யிதமேற்கொண்டு, காதலொடு பலர்க்கும்வளர் கல்வியொடு செல்வமெல்லாங் கவினவாரி, பூதலமெல் லாமுமது புகழ்பரவ வருமுகிலே. புனித மேலோன், ஆதரவா யருள்கஜமால் முகியித்தீன் சாகிபுசீ ரணிக வாழி. (2)

மன்னாத வுலகமிசை மன்னுமொரு புகழொழிய மருவு மெல்லாந், துன்னாது நிலைகுலையு மெனவுமது திருவுளமேற் றுணிவு கூர்ந்தே, பன்னாளு நிலைநிறுவும் பலபெரிய தருமமெல்லாம் பணித்த தன்றோ, மன்னாதி மன்னர்ஜமால் முகியித்தீன் சாகிபுநீர் வாழி மாதோ (3)

பழியஞ்சா வினையேது மருவாது பொருள்வரவாற் பார்த்தூண் தன்னால், துழியஞ்சா துலவுமுகிற் குலம்யாவு முமதுதிருத் துணைக் கை காணு, முழியஞ்சாப் பயந்தகலு மெனவோதல் சரியெனவே யுரைப்பேனென்றும், வழியெஞ்சா திருந்துஜமால் முகியித்தீன் சாகி புநீர் வாழி மாதோ (4)

வல்லவனின் றிருப்பணியே மகிழ்பரவு முமதரிய வாழ்நாளெல் லாம், அல்லலறப் புரிவதனா லரசரெனும் ஜியார்ஜ்முடி யணியும் போது, பல்லவர்கள் புகழமெரீட் பத்திரத்தை யினிதளிக்கப் பகர்ந் தா ரென்றும், நல்லவர்கள் புகழுஜமால் முகியித்தீன் சாகிபுநீர் நயந்து வாழி (5)

கமிங்கெனுமோ ரதிபரவ ராணையினா லுலகமெலாங் கருதும்பேர் யோ, கமிங்கெனுமுந் திருச்சமுக மதைவளங்கிப் புகழ் விளங்குங் கருணையானீர், கமிங்கெனு மோர்துதி செலுத்துங் கனதியுள்ளீ ருமதுமுகங் காண்போரெல்லாம், கமிங்கெனவே புகழுஜமால் முகியித்தீன் சாகிபுநீர் கவினவாழி. (6)

மெய்வருத்தம் பாராது மேதினியெல் லாமிஸ்லாம் விளக்கவேண் டிப், பொய்வருத்து முடலாதி பொருள்யாவு மதற்கெனவே பொ லிவினீந்து, மெய்வருத்த வருமரிய கொழும்பாலிம் சாகிபெனும் விமலத் தார்க்குக், கைவருந்த வளிக்குஜமால் முகியித்தீன் சாகிபு நீர் கருத வாழி. (7)

பிஸ்மில்லாஹ்.

# கீர்த்தனு மாலிகை.

## தற்சிறப்புப்பாயிரம்.

### கட்டளைக்கலித்துறை.

பூவாருலகம் புனைக்கும் வல்லோனைப் புகழ்ந்து நின்று
மாவாருயர்சல வாத்தால் முகம்மதை வாழ்த்தியபின்
நாவாருயர்தரக் கீர்த்தனு மாலிகை நன்கியம்பப்
பாவாரரும்பதந் தேராத நெஞ்சம் படைக்கின்றதே.

நபிஸல்லாகு அலைகிவஸல்ல மவர்கள்மீது

### S கூடசதுக்கம் கட்டளைக்கலித்துறை.

சங்கதி மேவு மதினுவளர்தரு வேசதுவே
தங்க மருவிய வுத்தமரேசக லாகமமே
பொங்கிய நற்கதிர் பொற்றுள்கமலமுற் றீர்நபிகள்
வங்கிச நாயக மேகபீபானமு கம்மதுவே.

### S பதம் பல்லவி.

இன்னம் ஏனோவரக்காணேன் என்னசெய்குவேன் (இன்)

### அநுபல்லவி.

நன்னயம்வளரநபிநாதர் மகுமூதரே (இன்)

### சரணங்கள்.

கண்ணிரண்டுங்கண்டுகளிக்க மையல்
கொண்டாநந்தக்கடல்குளிக்க
பண்டுநாளிற்செய்தபாவநீறப்பார்க்க துயர்தீர்க்கவே (இன்)

---

S இவ்வடையாளமிட்ட செய்யுட்களெல்லாம் இந்நூலாசிரியரின் முன்னோராகிய மகாவித்வான் கருத்தசதக்கு தம்பிப் புலவரவர்களா லியற்றப்பட்டன.

துன்பமகன்றகன்றோட மனத்
தின்பமிகுந்துகொண்டாட
தொண்டரிலெழியேன்சிரசிற்பாதஞ்சூட புகழ்பாடவே (இன்)

மக்கவாழப் துல்லாபுததிரர் உயர்
சொர்க்கம்வாழநவசித்திரர்
மிக்கசதக்குநம்பிக்கருள்செய்வேதர் நவநீதரே (இன)

S பல்லவி.

மீறுதானந்தமோகவிரகம் இது
வேளைநல்குவீரநுக்ரேகம்

அநுபல்லவி.

மாறில்லாதவல்லவன்றிருத்தூதே மக்க
மகுழதுபதத்துணைமீதே வராதிப்போதே (மீறு)

சரணங்கள்.

பாவங்கோடானகோடிகோடி செய்தேன்
பரிகரித்தேனேவாடிவாடி
தேவரீருமைத்தேடித்தேடி யுங்கள்
செம்பொற்பதத்தைநாடிநாடிப்பாடிக்கொண்டாடி. (மீறு)

வெவ்வினைத்தொடர்பவந்தீர்த்து நெஞ்சில்
வெளிச்சமுண்டாக்கியெனைத்தற்காத்து
பொவ்யநெறிமுறையிறசேர்த்து வரும்
புபாபதிவழிபார்த்துப்பார்த்துப்பார்த்துக்கண்பூத்து (மீறு)

ஆதிவல்லவன்றிருத்தூதே மக்கத்
தப்துல்லாதருமகுழதே
சோதிநபிபொறபாதபோதே நம்பி
துதிக்கும்சதக்குத்தமபிமீதேவராதிப்போதே (மீறு)

S பல்லவி.

அஞ்சாதேநெஞ்சேயவர் செஞ்சரணந்தஞ்சமே

அநுபல்லவி.

மஞ்சார்குடையிறசூல் வள்ளலுண்டுநீயொன்றுக்கும்(அஞ்)

சரணங்கள்.

வராதமேன்னுமவர வரப்பிரசாதங்கொடுப்பார்
தராதரமறிந்து தங்கைதாங்கியெடுப்பார் (அஞ்)
என்நாளுநம்புதலாய் இருப்பதினுலேதிரிவாய்
ஒன்னூர்தமக்குமனம் உறுதிகொண்டருள்புரிவார் (அஞ்)
தூயனிரகுல்சதக்குத் தம்பிசொல்லதையுவப்பார்
காயனகர்முகம்மது காசிம்பேரிற்கருணைவைப்பார் (அஞ்)

இராகம்-எதுகுலகாம்போதி- தாளம்-ஆதி.

சிதமதிவதன சிங்காரமடமாது என்றவர்ணமெட்டு.

பல்லவி.

சோதிமதிவதனசுந்தரமகுமூதெந்
துரைவாரார்தெரிவாயே (சோதி)

அநுபல்லவி.

தூதர்க்கரசரிவர் சுகிர்தபொற்பாதந்தந்தால்
சுபமருவும்பாசுகமிகு மருள்தந்தார்
துஞ்சுமாயவினை யெஞ்சிடவவசிரு
கஞ்சப்பாதமல ரஞ்சலிசெய்திட
துதிசேரெழிலார் சுரந்தமெய்யினர்
கதிசேரொளிவார் கருதுண்மையினர் (சோதி)

சரணம்

காதங்கமழ்ந்துவீசுமே செங்களபம்பொங்கிய (காத)
கருதலருயிரற வொருகரமணவிடு
திருமறைபகரிறை யருள்பரிமளமொரு (காத)
கணித்தபொறிகளைத் துணித்துமறைநெறி
பணித்துவுயரிறை யணித்துமிகுநலம்
கண்டமாதவர்கள் கொண்டமகிழ்வின்புகழ்
தொண்டுபூண்டிடும் சுயபரிமளமொரு
காதங்கமழ்க்துவீசுமே செங்களபம்பொங்கிய (காத)

காதங்கமழ்ந்துவீசுமே சோதி
காணக்கண்களுங்கூசுமே யவர்

பாதமிதத்தைநேசமே செய்து
பண்ணும்பவத்தைநாசமே
காலுமுடலினிழல் காணுமோகாணுது
காலமுழுதும்பதக் கான்மலர்தோயர்த்
கருதுநமக்கிசைந்த வரதரவர்புகழைப்
பருகிப்பருகிமகிழ் மருவிமருவிநிதம்
பாடிப்பாடிப்பவ மருளதைவேரறுத்துத்
தேடித்தேடிக்களை தியக்கமதைமறுத்து
கனவிற்றுணிவாய் நினவிற்கனிவாய்
வினவும்பணியை நனிசெய்யெனவே
கணித்தமறைமொழி ரசமதையருந்தி
பணித்தபாசவிமோசன மிகுந்து
கந்தரமுந்தியே சுந்தரமிகுந்து
வந்தசுகந்தச வுந்தரமிகந்தோர்
காருலவுநாயகரின் பேருலவுதாசனெனும்
சீர்புகழ்செய்யிதமு கம்மதின்விச்சித்ர (சோதி)

---

தருவார்பதமே என்ற-லாவணி-வர்ணமெட்டு.

பல்லவி

வருவாரிம சூல்வளர் தாண்மணியே
வரமேவனமே சிரமீதணியே

அநுபல்லவி.

பெருமானபிமாருக்குமிக்க பேர்தருஞ்செங்கோலர்
பெலந்தாங்குமப்துல்லாவளிக்கின் பம்பயக்கும்பாலர்
பிறழாதவுண்மைநூலர்
பின்னுளுமநருகூலர் என்
பீடைதள்ளும்பண்புஞ்சாருன் - முன் - முன் - முன் - முன் - முன் (வரு)

சரணங்கள்.

பதிமேற்பதியாப்பதமாதவரே
பரியாடரவோடுரைசாதவரே
துதிசேரதனுன்கிளைத்தூதவரே
துகளேதனுகாவுடலாதவரே

முதியா துயர்மாணிக்கமக்க மாமதிஞவாசர்
மகிழ்நீங்குமன்பில்லாரகத்தும் பண்புகுத்துந்தாசர்
மறவாதுவுபதேசர் மாயாதொளிர்செய்தேசர்
மனமேவு துன்பம்பம்புந்தன்ப-மன்-மன்-மன்-மன்-மன் (வரு)

சனகாம்பதமார்கபுலோடமர்ந்தோர்
ஹலறத்திறைமோடுரையேபகர்ந்தோர்
மனமேவிடுமும்மலமேதவிர்ந்தோர்
மதுவார்நஊமாலிகையேபுனைந்தோர்
வனவேட்டுவன்பின்கூட்டிலுற்ற மான்பிணைநின்றுதர்
வனமோங்குமிந்தீராய்வகுத்துப் பின்பொருத்துந்தாதர்
மருவார்தரும்பொற்றேசர்
மதியானனத்தின்வாகர்
வனமாண்புதங்கும்புங்கம்பொங்குன்-கண்-கண்-கண்-கண்-கண் (வரு)

ககனூர்தருநேர்கருணகரரே
கருதார்க்கருள்சேர்குணசாகரரே
பகமார்தருநேர்கிருபாகரரே
பரன்மீதருநீர்தருமாகரரே
திகழார்தருஞ்சன்மார்க்கநெறி சேயரெமக்கூட்ட
தினமேவுசெய்யிதமுகம்மது செய்பவத்தையோட்ட
சிறந்தோங்கும்வழிகாட்ட சிரமீதுபதஞ்சூட்ட
திசையெங்கும்விண்புகழ்தங்குந்தாயக-மன்-மன்-மன்-மன்-மன் (வரு)

---

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஞானஸ்தானயானேசேர
கோனென்மாமகுமுதேயுந்திருமலர

அநுபல்லவி.

நவமார்மஞ்ஞையானரூபா
நபிநாயகபதியேமிகு கவினூர்தருநீதியேதினம் (ஞான)

வானஸ்தானந்தானேசேருந்
தீனின்மாமணிநாதாமன்தெரிசனமுற (வான)

வனமா ரிந் துவ தனபூபா
மதிருகரதிபிரவிது ததிநான்பறை துதிபா தினம் (ஞான)

ஈனஸ்தானந்தானேதீர
மானின்மாபிணைநீதாவென்ன நு தினமன (ஈன)

இதமார்கஞ்சப்பதமேதோயா
விறைநாயகனருளேசது மறைநாயகப்பொருளே தினம் (ஞான)

சேனைதானேகானேயேக
தேனினீரழைத்தா தாவுந்திருவரமுமுஞ் (சேனை)

செய்யிதுமுகம்மதுதஞ்
சிரமீதணிபதரேமழைக் கரமாமுகம்மதரே தினம் (ஞான)

---

இராகம்-காம்போதி தாளம்-ஆதி

மரத்தடியிலிருந்தமங்கை-யென்றவர்ணமெட்டு.

பல்லவி.

மரத்தடியில் விழுந்துமன்ன மகுமூதைக்காணேன் (மர)

அநுபல்லவி

மாயாப்பிரபஞ்சமென்னை மயக்கவேயிக்கோலமானேன் (மர)

சரணங்கள்

மன்னவரைமறந்தேனே மதிமோசமாய்ப்போனேனே
முன்னவன்றிருத்தூதான அன்னலகுமதைக்கண்டு (மர)

பஞ்சபாதகனானேனே நெஞ்சமுருகலானேனே
வஞ்சியர்புகுத்திவைத்த நஞ்சைத்தொகுத்தோரைக்கண்டு(மர)

கானகத்துமானைப்போலே கலங்கலானேனேமாலே
வானகத்தமரர்மேலே வருமிறசூலைக்கண்டு (மர)

செய்வினைதெரிந்திலேனே தீவினைபுரிந்தேனானே
செய்யிதுமுகம்மதுவின் செயவகுமதைக்கண்டு (மர)

---

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்.

ஸ்ரீராமச்சந்திரனே-யென்றவர்ணமெட்டு.

பல்லவி

சீர்வாஞ்ச்சந்திரனோர் சீர்யோகச்சுந்திரரே
சீர்மன்னரானவிற-சூல்-சூல்-சூல்

அநுபல்லவி.

சேடியே புகழ்-பாடியே
சேர்பாதகஞ்சமலர் தார்மீதுதஞ்சமென
வேர்பாவந்துஞ்சுமிற-சூல்-சூல்-சூல் (சீர்)

சரணங்கள்.

காதங்கமழ்மகு-மூதராம்
காமாகிதந்தெறவே-நேமாவிதம்பெறவே
சேமாவிதந்தவிற-சூல்-சூல்-சூல் (சீர்)

பாதமவனிப-டாதமான்
பாவாணருந்துபுகழ் நாவாரவந்தபுகழ்
தேவாரவிந்தவிற-சூல் சூல்-சூல் (சீர்)

மீட்டும்பவத்துய-ரோட்டியே
மெய்யறிவில்லாத்துவித செய்யிதுமுகம்மதுவை
உய்யுமருள்செய்யுமிற-சூல்-சூல்-சூல் (சீர்)

---

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்.

அள்ளியள்ளிக்குடிக்கும்-என்றவர்ணமெட்டு.

கண்ணிகள்.

அள்ளியள்ளிக்கொடுக்கும்வள்ளனீர்வாருமே
ஆநந்தவாரிசேருமே-கண்பாருமே-ஆனந்தவாரி
சேருமே இறை
ஆசைக்கிசைந்த நேசகம்பீர
ராசருயர்விசு வாசமுகம்மதே (அள்ளி)

காமருவுங்களபமான்மதவாசமே-காதங்
கமழ்ந்துவீசுமே-வுல்லாசமே காதங்கமழ்ந்துவீசுமே-பிர
காசமிகுமயில் வேசர்சம்பூசித
போசரகுமதே நேசமனதுற (அள்ளி)

தஞ்சந்தஞ்சம்பெருகுங்கஞ்சமென்பாதரே-சம்பன்ன
ராணநாதரே-மெய்வேதரே-சம்பன்னராணநாதரே பிர
சாதமிகுமிறை தாதருயிர்களின்
தாதர்மகிழ்நவ நீதரனுதினம் (அள்ளி)

அருண னுரைபகருங் கிரணசையோகரே-அற்புத
மானவாகரே-பொற்றேகரே-அற்புதமானவாகரே-எனக்
காருங்கதியில்லை நீரேநிதமருள்
வீரென்றுமதுதாள் சேரமகிழ்வொடு (அள்ளி)

மஞ்சுங்குடைகவிழுமஞ்சுகார்சரே-மாமதிஞ
வாசரே சந்தோசரே-மாமதிஞவாசரே-இந்த
வையகமுற்று மெய்யறிவற்ற
செய்யிதுமுகம்ம துய்யும்வழிபெற (அள்ளி)

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

நானேயகுதி-யென்றவர்ணமெட்டு.

பல்லவி.

மானேசொல்லடி வாது
செய்யாது ஆகி (மானே)

அநுபல்லவி

மானேமதினநகர்க்கோனே வருணப்பதந்தானே
மருவிடவந்தேனே மனமதுநொந்தேனே மகிழ்செந்தேனே (மானே)

சரணங்கள்.

நானே நபிகள்பெரு மானேநகும்பிரபை யோனே
நறைகமழ்சீ மானே நயம்பெறவந்தேனே நயந்துமீனே (மானே)
பாக்யம்பகருமறை வாக்யம்பரவியச லாக்யம்பலன்பெருகும்
யோக்யம்பவவினையைப் போக்யநபியைநோக்கி (மானே)
பையன்மனதுமிக நையும்பவத்துபரி ஞய்யும்பரமனருட்
செய்யபனுவலுரை செய்யித் முகம்மதுய்ய (மானே)

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பூரணச்சந்திரவிம்பம்போல்-என்றமெட்டு.

பல்லவி

பூரணச்சந்திரவிம்பமே - மருமூதரின்
பூம்பதமது தன்பமே

## அநுபல்லவி சரணங்கள்.

காரணக்கடவிவர் காண்மலரைவர்ணிக்கக்
கருதும்பெரியோரேநீர்பொருதும்பவந்துணிக்க
கந்தரமுந்திரு-வுந்தெற-வந்தசுகந்தர
விந்தசவுந்திர-வந்தரகதிக்கும்

நவநிதிக்குமிகவுயர் மதிக்குமமரவர் துதிக்குமதுநிகர்
விதிக்குமிறையவன் வகுக்கவிலையொளிர்

காந்தமுங்குண சாந்தமும்மிக
வாய்ந்திடும்படி யீந்திடவருமொரு

காவதமேவியகோவுயர்மான்மதக் காவோவலா துயர்பூமதுவோ
காதலித்தனன் பூதலத்தினிற்கண்டு

கலங்களிலங்க துலங்கவிழுந்து
கனிந்துபுகழ்ந்து புனைந்துமகிழ்ந்து

காலமூன்றுமறு கூலமேவவவர்
சீலன்வருசையிப் ரூகிமேவுபரி (பூரண)

வானோர்பரவும்பெரு மானோர்மறைபகர லானோர்மதினகர்க்
கோனோர்மொழிமதுரத் தேனோரிறையருசி லானோர்வனம்பரவு
மானோர்தனக்குப்பிணை யானோர்—எவர்க்குமருள்
பாக்யம்பரமனருள்வாக்யம் பரகதிசலாக்யம் அருள்சுரந்து

வஞ்சக்குபிரவர்தந் நெஞ்சக்கவரொழிய
விஞ்சைக்கதிர்மறையை மிஞ்சவிளைத்தவர்

மங்குலங்கவிகை வாரணராம்-உயர்
திங்களிங்குலகுகாரணராம்-பிர
சங்கரெங்களிறையாரணராம்-மிரு
சங்கைதங்கும்பரிபூரணராம்-கரு

வண்டுமதுரரச முண்டுசுகிர்தவிசை
விண்டுமகிழ்ந்துகுடி கொண்டமலாணியும்
பண்டுமுயலரவம் விண்டமலர்ச்சரணந்
தொண்டரகத்திருத்திக் கொண்டமுகம்மதுவே

மனமறுதினமிகு மயல்பரவிடவரும்
மதியிலியென்முன்பர கதிதரவருகவே

மையலகலாதுபுகழ் செய்யிதுமுகம்மதுவை
உய்யுநற்கருணைமழை பெய்யமிகவருள்பரி (பூரண)

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

ஏனோவென்மேல் பழிசுமத்துறீர் என்றமெட்டு.

பல்லவி

மானேயென்மேல் மறுதலிக்கிறாய்-சகிமானே

அநுபல்லவி.

வாதென்னுகோதையே வாதென்னுகோதையே
வரதாகமமா மருமுதரிடஞ்செல (மானே)

சரணங்கள்

மலர்தலையுலகமெல்லாம்புகழ்தருமவர் மலரடிபாவிடயானே
மனமதுமகிழ்தருதினமினி துரைக்கினும்வழுத்திடுவகைதெரியேனே
மாறும்மேயென்பாவம்-மாறும்மேயென்பாவம்
வருந்திடநின்று பெருந்துயரோதிட (மானே).

திருபரவியவமரவர்க்கதிபதியெனும் ஜிபுறயில்தடவரைமீதே
திறனுறுமிறையவனருண்மறைவழுத்திடுஞ் சிரமருசுயர்திருத்தூதே
தீரும்மேமுன்தாபம்-தீரும்மேமுன்தாபம்
ஜெயந்தரவந்த சுயம்பிரகாசரா (மானே)

திசைமலியசலமெல்லாந்தவிர்ந்திடுமுயர் திருபுஜபலமிகுதீரர்
தினந்தினமனமதுபவந்தனிலுழன்றிடுஞ் சிறியனின்பெருவினைதீர
சேரும்மேமுன்லாபம்-சேரும்மேமுன்லாபம்
திருந்திடவந்த பொருந்தியசுந்தா (மானே)

கவருமுங்குபிரவரிரிதரவொருபிடி கரமணவிடுந்திடவீரர்
கதியுதவியதிருமதினமன்னகர்க்கதி பதியெனுமதிகவுதாரர்
கஞ்சம்மேவும்பாதர்-கஞ்சம்மேவும்பாதர்
கவன்றிடுசெய்பிது முகம்மதினருள்பெற (மானே)

இர்கம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்

கண்ணேயென்னசெய்வனடா என்றமெட்டு.

பல்லவி.

கண்ணேயென்னசெய்குவேனுன்பரகதியே-கதிர்மதியே

அநுபல்லவி.

கந்தரமேறிய செந்திருப்பாதசு
தந்தரமாகவே தந்தருட்செய்யுமென் (கண்)

சரணங்கள்.

விண்ணேர்சென்னிமேவியதாமரைப்பாதா-ஜகநாதா
விற்பனமாதவ முற்பவமேயுயர்
அற்புதமாகிய கற்பகமேயென்றன் (கண்)

முன்னோர்சொன்னமுதுரைமாமகுமூதா-சதுவேதா
பன்னகப்பூம்பொழில் துன்னியமாமக்க
மன்னவராமெனும் அண்ணல்முகம்மதென் (கண்)

காரார்குடையார்தரும்பேருபகாரா-மகாரேரா
கத்தரெனும்பரி சுத்தநிராதர
முத்தனருள்பிர சித்தமுகம்மதென் (கண்)

மையார்கன்னிமாகதிஜாகொளுமதனு-மதிவதனு
செய்யபுகழுரை மெய்யறிவெய்தவே
நையும்வினையற செய்யித்முகம்மதென் (கண்)

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

உற்றதென்னசொல்லம்மா என்றமெட்டு.

பல்லவி.

உற்றதெல்லாஞ்சொல்லம்மா-அம்மாவெனக்
குற்றதெல்லாஞ்சொல்லம்மா

அநுபல்லவி.

பெற்றதாய்தமர்செல்வம்பிறந்தவராலும் பேறெனக்கென்னலாபம்
பற்றலர்பரவியபதமரைமகுமூதர் பாலினிலினிதேகி
யவர்பாலினிலினிதேகி-யெனக் (குற்ற)

சரணங்கள்.

தீராதமும்மலவாரியிற்புகுந்தே திகைக்கின்றதென்னுவி
காரிடங்கவிகையர்காத்திமுலன்பியா காரணரிடத்தேகி
யுயர்காரணரிடத்தேகி யெனக் (குற்ற)

காதநறைகுலவுங் கருணையம்பெருமான்காதீமுகம்மதுவின்
ஆதபந்தனைத்தவிர்பாதபங்கயந்தர அந்தணரிடத்தேகி
மிகவந்தணரிடத்தேகி-யெனக் (குற்ற)

கோதில்கெம்பீரர் குபிரர்விரோதர்கொடுவரிழ்ப்பல்பகர்ந்தோர்
தீதகன்செய்பிதுமுகம்மதின் பவத்தொடர்திக்கெல்லாம்
பறந்தோட பலதிக்கெல்லாம்பறந்தோட-எனக் (குற்ற)

---

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

மானிலமுழுவதும் அரசியான்புரிந்து என்றமெட்டு.

கண்ணிகள்.

மாநிலமுழுவதும்பரவிய சீர்த்திவளர்திகழ்மகுமூதா
மதிகுமமரவர்தஞ்சிரதிற் பதிக்கும்பதவார்சமருணதா (மாநி)

மானினம்பரியுடபாதியரவி ளுடுவெழுத்திடுந்திருநாவா
மரிக்குஞ்சிறுவரெழுந்திருக்கக் கருணைசெயுமாட்சிமை
மகாதேவா (மாநி)

வானிலஞ்சுடர்தரவருமதிய தனைவகுத்திடுநவநீதா
வருத்தும்பவதுயர்களறுத்துன்றிருவருளைப்பொருத்திடு
புகழ்வேதா (மாநி)

பந்தப்பிணிவறுமையெந்தப்பொழுதுமெனைத்தொந்திப்பதறிவீரா
கந்தப்பதத்திணையைவந்திப்பதற்கத்திறசிந்திப்பதளியீரா (மாநி)

காதங்கமழுநறைமோதும் பிரபைதருங்காரணத்திருத்தூலா
கதிக்குஞ்சதுமறைகள் துதிக்குந்தகுதியுள்ளகாரிடுங்
குடைம்மலா (மாநி)

ஆதவன்றருகதிரகலும் பொழின்மதினத்ததிபதியெனும்பூபா
அகலிடந்தனில்வேறு புகலிடமில்லையுமதடைக்கலமதிரூபா (மாநி)

கானிலம்புனல்தரும்காத்திமுலன்பியா காரணமிருந்தாதா
கருதுமெழியவனைப்பொருதும்பிணிய கற்றிக்கதியருள்
தருமபோதா (மாநி)

பூதலமிசைபதியாதபதக்கமலப் போதினைப்புகல்யானே
பொருதுங்குபிரவர்கள் பெரிதுமடியமணல்புகழ்கரத்
துடுகோனே (மாநி)

ஆதிமுதல்வனெடுசோதிமறைபுகல அருசிடத்தமர்கோவே
அழுத்தகரவிழிகள்பொருத்தி மறைவழியைநிறுத்தி
யமுஸ்தபாவே (மாநி)

நையுமுமதடிமைசெய்வித்முகம்மது வின்கனிவினையகல்சிலா
கவிலும்புலவர்மனக்கவலை தவிர்த்திரங்குஞ்சுவன
மளிக்குமேலா (மாநி)

---

இராகம்-மேர்கனம்-தாளம்-சாப்பு.

பார்க்கும் பார்வையிலே என்றமெட்டு.

கண்ணிகள்.

சாதுஜயமகு மூதர்சுயம்பிரகாசம்
சதாவிசுவாசம் சரதமன்னேசம் - நிதஞ்
தஞ்சமவர்பாதக் கஞ்சமென்றேனிந்ததாசன் (சாது)

மங்குலிடுங்குடை தங்கும்பரிமளமேனி
சர்வகலைக்யானி சம்சாகரஞானி - உயர்
மாட்சிமையாம்பதக் காட்சியொன்றேபிரதானி (சாது)

தஞ்சமென்றோர்களுக் கஞ்சலஞ்சலென்றதாதர்
சம்பூசிதநாதர் வரப்பிரசாதர் - மகிழ்
சந்ததமுந்தவ மூந்தியசெந்திருப்பாதர் (சாது)

சாபங்களும்பழி பாவங்களுங்கொண்டதாலே
புவிமேலே யினிமேலே-பரி
தாபந்தனைத்தவி ராகந்தமாமிறசூலே (சாது)

பையலென்றுந்துதி செய்யிதுமுகம்மதுபாடி
பனுவலைச்சூடி பதமலர்நாடி-மிகு
பட்சமுடன்வந்தேன் ரட்சித்திடுமருள்கோடி (சாது)

---

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

வேதாசரணம் என்றமெட்டு.

பல்லவி.

வேதாசரணம்-வேதமகு-மூதாசரணம்

அநுபல்லவி.

வேதா தற்பரன்குன்றமதிலுரை
தீதானபந்தத்தைவிட் டாதாரமாகவரும் (வேதா)

சரணங்கள்

சீர்வாய்ந்த நம்மகளைத் - திருமணமிறைசெய்தசீலா - வுபர்
தேவரமரர்முதல்யாவருந் துதிசெயுமேலா
பார்வாய்ந்தொரூகுபுகழ் பாவையாமினுதரும்பாலா - துய்ய
பரமனுரைபகரவருமொருபெருமநுகூலா

காராருமுகிற்குடைகவிந்திடநாடி
கருதிமுடுகிவருங்கடிதினிலோடி
பேராருமுமதுபொற்பாதாரந்தேடி

பிரியமுடனேவந்தேன் பெரும்புகழ்பாடியேநாதா
ஜக நாதா - நறைகுல்வும் பாதா - நவிலுமிறைத்தூதா - வுமை
நம்பிப்புகலுமெனக் கின்பமுதவவரும்போதா (வேதா)

காதநறைகமழக் - கருணையருளும்பிரகாசா வுயர்
ககனமுழுதுமிகு மகிமைபரவுமயில்வேசா
பாதமவனிமிசைபதியாது வருமுபதேசா - உயர்
பரகதிதரவருநரபதியெனும்விசுவாசா

ஆதவன்றருகதிருஞ்சுடர்மதியே
அந்தரம்புவனமெல்லாமதிபதியே
மாதவரப்துல்லாமகவெனுநிதியே
வரமருவும்பிரபைதருமுயர்பதியான - வாசா

வுயர்வாசா - மருவுமிறைநேசா வளரும்ஜகதீசா - வுமை
வந்தித்திடுஞ்சிறிய மைந்தனைக்காத்தருளுந்தேசா (வேதா)

தேர்வேந்தருங்கழலைச்சிரமிசைபரவியசீரா - பெருந்
திமிரர்குலமொருவவமரவருதவிசெய்நேரா
கார்வாய்ந்தொளிருமிருகரதலர்பரவியவூரா - வுயர்
கத்தனிடமகிமைபெற்றிடுமதிகவுதாரா

சருவதயாபரன்றருமருள்கூட
தாரணிமீதிலுங்காரணம்பாட
வருசையிபுருகீம்வல்வினையோட

வானவரம்பையர்கள்வளரிசைபாடவே - வாகா
திரு வாகா - வணங்குமிறை யோகாவரமருவுந்தேகா - வுமை
வணங்குமடிமைமன் - மிணங்கவருள்புரியுமேகா (வேதா)

மையணியுங்குழலாள்மாதுகதீஜாமணவாளா-தின
மருவும்பரமனொடுவசனித்திடுமசலத் தோளா
மெய்யணியும்பெரியோர்விரும்பவருங்கிருபையாளா-செழு
விகசிதநிகர்தரும்மிருசிதவிமலமென்றாளா

பையரவையழித்தபரமதயாளா
பண்ணிபணிந்துரைதரப்பகருரையாளா
செய்யிதுமுகம்மதிச்சிறியனையாளா

திருபரவுங்கிரணமுறுங்குடையாளராம்-தேவா
மகா தேவா-திருமறைசொன்னவா தினம்புகழுமூவா-வுமைத்
தெரிசித்திடுங்கருணைவருசித்திடுகமுஸ்தபாவாம் (வேத)

---

அரவமோந்தாதா என்றமெட்டு.

பல்லவி.

கவலைதீருமே-கடைக்கண்ணுற்பாருமே

அநுபல்லவி.

திவலையேனுமுந் திருவரமருள்
அவலமேகவே யனுதினமனக் (கவலை)

சரணங்கள்.

கதிக்கபாடமே-அமரோர்- துதிக்கும்பீடமே
மதினபூபரே மகிமையோகரே
புதியரூபரே புகழும்வாகரே (கவலை)

வேதவாக்கியமே-நாதா-விமலயோக்கியமே
காதமேவிய களபவாசரே
பாதமேவிடம் பதித்தபாசரே (கவலை)

கற்பகத்தருவே-மேலோ-ருற்பவத்திருவே
ககனமேவிய சுகுணசீலரே
மகிமையோர்புகழ் மிகுந்தயாளரே (கவலை)

வேதசற்குருவே-யுயிர்-மேவுநற்கருவே
செய்யவும்பதச் செழுமலரருள்
செய்யிதுமுகம் மதுவின்சிந்தையின் (கவலை)

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பிரணவசோதி யென்றமெட்டு.

கண்ணிகள்.

N பிறழ்சவசோதி-ஒபிரமமேயாதி
அரவசங்கராவரத துங்கர-அணியேமணியேபணிவில்லா
ஆமினுபாலா அருள் சேமமேமேலா
அற்புதமாமகுமூதே-விற்பனமாகியதாதே
பொம்பதிபெறவேயுந்தம்-நற்கதிதருவீரந்தம் (பிறழ்)

சோமனைவகுத்தீர்-அதி-நேமமேபுகுத்தீர்
வாமகுஞ்சர நேமமிஞ்சிய-மதியேநிதியே துதியுள்ளா
மந்திரம்படைத்தீர்-வெகு-சுந்திரமுடைத்தீர்
மான்மதவீசுந்தேகா மாமறியமணர்யோகா
தேன்மொழிபேசியதேவே-நின்வழிநிற்பவர்கோவே (பிறழ்)

தேவரீர்வருவீர்-நுந்தஞ்-சேவடி தருவீர்
பாவமும்பகைசாவ நுந்தகை பகலேமுகிலேயிகலிலா
பாக்கியநாதா-இறை-வாக்கியவேதா
பாதுபுரிந்திடவே து-ஈதில்ததிவேறேது
ஒதுகளஞ்சியமுய்யப்-பாதகனும்பிழைநைய (பிறழ்)

---

இமாமுனை முகம்மதிப்னு இத்ரீசுஸ்ஸாபிகி றக்மதுல்லாகி,
அலேகியென்ற ஷாபிகி இமாம் அவர்கண்மீது

---

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பக்தியில்லாதமதியே யென்றமெட்டு.

பல்லவி.

ஞானமில்லாதமதியே-நீசுவில்வத-பாயமல்லவோகதியே

அநுபல்லவி.

மாயாப்பிரபஞ்ச மயக்கமறவே துஞ்ச
மன்னுமுகம்மதிமாம் சொன்னமுறைபிறழ்ந்து

---

N இச்செய்யுள் சீறுப்புராணம் பாடிய மகாவித்வான் உமறு புலவரவர்களின் மரபோதயரும் இந்நூலாசிரியரின் மாணவருமான ஸ்ரீமத் பு-ல-இ-நல்ல முகம்மது களஞ்சியம் அவர்களியற்றியது.

மஞ்சஞ்சணிகுழ-லுஞ்செஞ்சிலை நு
லஞ்சஞ்சண விழி-யுஞ்சஞ்சலமிகு
வருணிகிரணமலர்ச்-சரணஞ்சரணமென-ரீ-ரீ-ரீ
வனமுங்கின்முமனு-தினமுந்தனமும்பெறு (ஞாய)

சரணங்கள்.

காலமனைத்தும்பவமே-கைதேர்ந்துநீ-காண்பதென்னவோ நவமே
ஆலோவிதஞ்சொல்லி-யவனியிலலைகிறாய்
அண்டம்புவனமுழு-தென்றும்புகழ்பரந்தோர்
அந்தந்திகழ்பவ-ருந்துந்தருநிக
ரிந்துந்தருகதிர்-நந்துந்திருமுக
அருளுங்கலைமுழுதுந்-தெருளுமுகம்மதிமாம்-ரீ-ரீ-ரீ
அபயமபயமென-வுபயபதமேதொழா (ஞாய)

காயமல்லவேசுகமே-நீகாண்-ன-மாயமல்லவோமனமே
ஓயாப்பிரபந்த-வுவரிதனிலுழன்றாய்
உம்பரிம்பர்புகழு-மன்பரிமாம்ஷாபிகி
ஒன்றுந்திருமத-மென்றுந்திசைபல
மண்டும்பிரபல-ரின்றுன்றுயர்பல
வுதயபுவனமதி-யதுமுன்னிருள்புரைய-ரீ-ரீ-ரீ
ஒதுங்கும்பதுங்குமவ-ரிதமும்பதமும்பெறு (ஞாய)

காலமுழுதுந்தெரிந்தோ-ரிமாமாலிக்கு-கருதவிளக்கம்புரிந்தோர்
சீலமிகுஞ்சுவனத்-திறவுகோலானவர்
செய்யித்முகம்மதுவின்-சென்னிதனிலிருத்தும்
செம்பொன்னடியின-ரென்பும்பரனென
அன்பின்மொழிபவர்-நம்பும்பரிவினர்
திகழுங்கவிபலரும் - புகழுமிஸ்றதிபர்-ரீ-ரீ-ரீ
திறமுந்-தரமுநல்ல-வரமுமுரமும்பெறு (ஞாய)

---

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

ஆசைமீறி யோடிவந்தேனே-என்றமெட்டு.

பல்லவி.

ஆசையாகி வாடிநொந்தேனே-யருள்குவாயடி-செந்தேனே

அநுபல்லவி.

ஆசி-மன்னேசிசந்-தோசி விசுவாசி
ஆதாரம்வேறில்லடி-மலர்ப்-போதாரமே செல்லடி (ஆசை)

சரணங்கள்.

பையல் வெம்பினேனே-பாதநம்பினேனே
பாடிமுன்-னோடிபண்-கோடி மலர்சூடி
பாக்யம்பெறலாமடி-மறை-வாக்யம்பெறநானடி (ஆசை)

கன்னல்மறை வாசர்-காரூன்மகிழ்நேசர்
கண்டுமுன்னின் றுகண்-கொண்டுதுயர்விண்டு
காணுமுகம்மதிமாம்-பதம்-பூண விதம்சதமாம் (ஆசை)

என்றுமமறு கூலர்-இத்ரீசருள்பாலர்
எது இவ்-வாதுவெப்-போதும்சகியாது
எதுமுடியாதடி-யொரு-போதுமிடியேதடி (ஆசை)

பாவமிஞ்சினேனே-மேவிக்-கெஞ்சினேனே
பங்கம்பதுங்கும்ப்ர-சங்கம்பரதுங்க
பாதாரமீதன்னமே-செல்ல-தீதேகுமேமுன்னமே (ஆசை)

புந்திமகிழ்ந்தேனே-வந்து-புகழ்ந்தேனே
பொய்யாத-செய்யாத-செய்யித்முகப்மது
போநந்தேனவர்தம்பமே-இன்று-தீர்ந்தேன்பவத்துன்பமே (ஆசை)

---

இராகம்-கமஸ்-தாளம்-ஆதி.

எப்போது-வந்தாளுவீர்-என்றமெட்டு

பல்லவி.

பொற்பாதந்தந்தாளுவீர்-புனிதவி-மாம்சாபிகி (பொற்)

அநுபல்லவி.

பொற்பாரமலநாதா-புவனம்பரவும் போதா
புண்யரே-கண்யரே-புகழுமிமாம்ஷாபிகீ (பொற்)

சரணங்கள்.

சஞ்சலத்தினுல்வாடி-யஞ்சலித்தேனோடி (சஞ்)
மிஞ்சும்பவமேதேடி-வெதும்பலானேனேயோடி
மெய்யரே-துய்யரே-விமலவிமாம்ஷாபிகீ (பொற்)

சூழ்பாவவிமோசன-துய்யமிஸ்றாராசன (சூழ்)
ஆழ்பாரவினைமரு-ளகிதமகலவருள்
ஆரண-பூரண-அபயவிமாம்சாபிகீ (பொற்)

காராருங்குடைமேலா-கருணையித்ரீசின்பாலா (காரா)
ஹாரூன்றசீது பூன்னே-கருதும் ஜயஞ்சேர்மன்னே
கத்தரே-சுத்தரே-கனதியிமாம் ஷாபிகீ (பொற்)

சீராருமாம்தியே-செப்புமுயர் பூபதியே (சீரா)
சிந்துபுகலும்மீது-செய்யிது முகம்மது
சீலரே-மேலரே ஐயமருளும்ஷாபிகி (பொற்)

மன்னுஇந்நேரம்-என்றமெட்டு.

பல்லவி

மீன்னுவெந்நாளும்-முன்னேவந்தாளும்
மருவாருங்கமலப்பொன்-மலரடிதாரும் (மன்)

அநுபல்லவி.

தன்னேன்றிருவருளார் தருவுருவான
தகமைமுகம்மது சாபிகிமாமே சந்ததம்-சதமாமே (மன்)

சரணங்கள்.

வாசகம்சீராமாமிஸாறாரா-மகிதலம்புகழ்மிகுமருவியசீரா
மாசில்லாவிதயத்துத்-தேசிகரான
மகிமைமுகம்மதுசாபிகிமாமே-மன்னருணிதமாமே (மன்)
ஏகமனுலாவிதரீசின்பாலா-இகபரமிரண்டிலுமிகுமநுகூலா
மேகமிகலுங்கவி-வேந்தர்கண்மேலா
விமலமுகம்மதுசாபிகிமாமே-விண்ணவர்புகழாமே (மன்)
சிறியோர்செயும்பிழைச்சிறுமையகந்தம்
செறலின்றிப்பொறுப்பது-பெரியோர்தஞ்சொந்தம்
செய்யிது முகம்மது-செய்விக்குந்தம்
ஜயமருள்முகம்மதுசாபிகிமாமே-செயவருணிதமாமே(மன்)

சம்சீரபிறஹ்ஹு என்ற ஹிந்துஸ்தானி மெட்டு.

பல்லவி

சம்சாரப்பிறக்கு நா-தாங்கமலப்பா
தாரந்தருவீரி மாம்சாபிகியே சம்

அநுபல்லவி.

அம்பூதலர்மீதலர் சேரும்சதா
பாதாரந்தரு வீரிமாம்சாபிகியே (பாதாரம்) (சம்)

சரணங்கள்.

பாங்கேகுதுகள் தேறேன்பாவசித்தம் மிக
பன்முறைமீறிப்பரந்துகித்தம் மன
மேங்குதியானே யெழுந்தபத்தம் எனக்
கிரங்கருணையிமாம்சாபிகி ய எனக்கி
ரங்குங்கருணே யிமாம்சாபிகியே (எனக்) (சம்)
பான்மறை வாருதிபருகிசதம் திரு
பண்புகொள் விண்புகழ்பரவுமதம் தரு

வான்மறிதிரை யுலகோருசிதம் பெற
வைகும்பருதி யிமாய்சாபிகியே பெற
வைகும்பருதி யிமாம்சாபிகியே (பெற) (சம)
ஐயமவிந்தலேந்தே யருகிகயம் விந்து
அண்டினே னுஞ்சுத னென்றபயம் புகல்
செய்யிதுமுகம்மது சேரஜயம் தயை
செய்யுந்தகுதியிமாம் சாபிகியே தயை
செய்யுந்தகுதியிமாம் சாபிகியே (தயை) (சம)

கௌதுல் அகுலம் முகியித்தின் அப்துல்காதிறில்
ஜைலானீறலியல்லாகுத ஆலா அன்குஅவர்கண்மீது

இராகம்-பிலகிரி-தாளம்-சாப்பு.
சையாமேரிஜான் என்ற மெட்டு.
பல்லவி.

மையலாகினேன்-நாதா-மையலாகினேன்-ஒலியே
மையலாகினேன் ஆகினேன்-வனசமலர்ப்பாதமீது (மைய)

அநுபல்லவி.

செய்யபுகழ்நாதரே-ஜம்மலப் துப்காதிறே
திகழும்போதரே-நாதா-திகழும்போதரே-ஒலியே
திகழும்போதரேபோதரே-சிறியேன்செய்தசிறுமைதீர (மைய)
பார்பரவுமீசரே-பன்னும்விசுவாசரே
பரமனேசரே-நாதா-பரமனேசரே-ஒலியே
பரமனேசரேநேசரே-பண்புவைத்தென்றன்னையாள (மைய)
ஆழும்வங்கமீட்டினீர்-அலகைதன்னையோட்டினீர்
அருளைக்காட்டினீர்-நாதா-அருளைக்காட்டினீர்-ஒலியே
அருளைக்காட்டினீர்காட்டினீர்-அநுதினமுமனதுவாடி (மைய)
சேருமுபகாரரே-சிர்பகுதாதூரரே
ஜயகம்பீரரே-நாதா-ஜயகம்பீரரே-ஒலியே
ஜயகம்பீரரேபீரரே-செய்யிதுமுகம்மதேழை (மைய)

இராகம்-உஷேனி-தாளம்-ஆதி.
நல்லபெண்ணைப் பாராய்தூதா என்றமெட்டு.
பல்லவி.

பையலென்னைப்பாரீர்-நாதா-பையலென்னைப்பாரீர்

அநுபல்லவி.

மையுலாவுமிந்த வையகமீதே
மஹ்பூபுசுபஹானி யெனும்பிரசாதே (பைய)

சரணங்கள்

வழுத்தும்வாய்மையறி யாதயான்மட்டி
மாதர்போகசுக மையலிற்கிட்டி
புழுத்தநாயினிழி புரையுறுமெட்டி
போதுசேர்கமலப் பாதத்திலொட்டி (பைய)

திருந்தும்வானவர்கள் சேர்குணமேரே
சீருலாவும்ஜெயி லான்தஸ்தகீரே
வருந்துமாதவர்கள் வாழ்த்திடும்சீரோ
வாதிலாதவப்துல் காதிறென்பீரே (பைய)

காயமாவியொரு கைந்நொடிமூச்சு
கருதிவாழுமென்ப ததுவும்பொய்ப்பேச்சு
மாயமானஜக வாரியினீச்சு
மாறினுலெனது காரியமாச்சு (பைய)

வாருலாவுமொலி மார்புயமீது
மருவுமோர்கிரண வாரிசப்போது
நேரும்பாதமுளோர் நீள்புவிமீது
நீரல்லாதுமறு பேர்கிடையாது (பைய)

---

ஏர்வாடிசுல்தான்செய்யிது இபுறாகீம்ஸகீதுவொலியுல்லா அவர்கள் மீது (கண்டுமையலானேன்டா) என்ற மெட்டு.

---

பல்லவி.

கண்டுமகிழ்ந்தோதடி கமலப்பதம் (கண்டு)

அநுபல்லவி.

வண்டுநிகரால முண்டவிழியழகி (கண்டு)

சரணங்கள்

வஞ்சக்குபிரவரி னெஞ்சக்கவரொழித்தே
மிஞ்சும்பயிர்விளைத்த விமலஸகீதொலியைக் (கண்டு)

ஆரணவாருதி அமரவர்க்காம்நிதி
காரணக்கடலெனுங் கருணைஸகீதொலியைக் (கண்டு)

அகிதவிமோசன ரமருஞ்சிம்மாசனர்
சுகிர்தகுணாகர சுல்தான்ஸகீதொலியைக் (கண்டு)

பரதகண்டமுழுதும் பரவும்புகழ்விளைத்தோர்
விரதவிஸ்வாசரெனும் சரதஸகீதொலியைக் (கண்டு)

செய்யிதுமுகம்மது செந்தமிழ்க்கிரங்கிடும்
செய்யிதிப்ராகிமெனுஞ் சிறந்தஸகீதொலியைக் (கண்டு)

இராகம்—கமாஸ்-தாளம்-ரூபகம்.

வாடிவாடி மாதரசே யென்றமெட்டு.

கண்ணிகள்.

காரார்நபிகுலகம்பீரர்-கதியுதவிடவருமதிதீரர்
தீரர்-திருவுபகாரர்-திமிரர்வி.ரோதர்
விண்ணவர்-மன்-மன்-மன் (காரா)

பரனுரைநிதமறவாநேசர்-பரவைசூழ்ழுபடிவாசர்
பாச-ரிறைவிசு—வாசர்பரவுபதேசர்
பாவலர்-பண்-பண்-பண் (காரா)

வரமருவியதிருமறை-நாதர் வளர்பவவினையகல்தருநீதர்
வாகு-மிகுமிபு-ருகிமொலியுப-யோக
மாவருண்-மன்-மன்-மன் (காரா)

தினந்தினம்புனமனவினையோட-செய்பி துமுகம்மதினிசைபாட
சேருந்திருமுகம்-பாரும்ஜயந்தர-வாருந்
தேவரென்-முன்-முன்-முன் (காரா)

குதுபுல் அக்தாப்-சாகுல்கமீது ஆண்டவரவர்கண்மீது

பல்லவி.

ஆதாரம்வே றேதையா-அருளாதென்னவாதையா (ஆதா)

அநுபல்லவி.

ஆதவன்றருகதி-ரகலும்பொழில்வளந்த
வேதமுழங்குநாகை-விளங்கும்ஹமீதொலியே (ஆதா)

சரணங்கள்.

பாதாஅரவிந்தமே பணிவோர்களின்சொந்தமே
தீதார்பவத்தொந்தமே சிறியேனெனக்கந்தமே
வாதுசெயுங்கொடிய-வல்வினையகற்றிய
மாதவமே-மதியே-நிதியே-யெனக் (காதா)

சீராகியவாரணு செப்புதிருக்காரணு
பேராருமுதாரணு பேசுமறையாரணு
தீரமிகுமடியோர்-தினமுமடிபரவும்
சீர்பதி-யேகதி-யே துதியேயெனக் (காதா)

சேருமுபகாரரே சீர்நாகையெனூரரே
யார்க்குங்கிருபாகரே அதிமாதவயோகரே
செப்புங்கவியுமது-செய்பிதுமுகம்மது
சிந்தைவினையகல-வந்தனுதினமெனக் (காதா)

மாதிஹா ற்றசூல் ஷெய்குசதக்கத்துல்லா சாகிபுவொலியுல்லா அவர்கண்மீது (வாவென்றழைக்கலாகாதா) என்றமெட்டு

பல்லவி

போய்நின்றழைக்கலாகாதா-பெண்ணே-கண்ணே (போய்)

அநுபல்லவி.

போதும்போதும்வாது தீதுபெருகுதின்னும் (போய்)

சரணங்கள்.

வேய்புரைதோளினய் விகசிததாளினய்
தேயுஞ்சிறுமருங்குல் சேடியோடித்-தேடியின்னும்(போய்)
ஆரணமேவினர் அமரரையேவினர்
சீரணிவாழ்நுதலாய் சிந்தைநொந்து-வந்தேனிதோ(போய்)
பாவவிமோசராம் பரமனினேசராம்
பக்திசதக்கொலியை புத்தி-முத்தி-சித்தி-பெற(போய்)
போய்வருவதுவல்லால் புகல்வதிலைநீநல்லாய்
புத்தியணுவுமில்லாய் சிந்த-நித்த-நத்தி-யின்று(போய்)
வையகம்புகழ்சுலை மாணெலிசுதனிஞர்
செய்யித்முகம்மதுவைச் சேரு-நீரு-வாரு-மென்று(போய்)

---

உன்னைநம்பினேன் சாமி என்றமெட்டு.

பல்லவி.

உம்மைநம்பினேன்-நாதா-வும்மைநம்பினேன்-ஒலியே

அநுபல்லவி சரணங்கள்

சின்மயஞ்சிறந்தநாதா-திருமறைக்குருநீதா
இம்மையும்பரவும்போதா-ஏதென்மேல்வாதா (உம்மை)
கொந்தலர்புனேசரே-குணகரையின்வாசரே
செந்திருப்பிரகாசரே ஜகதீசரே (உம்மை)
ஆரணம்புகழையரே-யமரர்பணிதுய்யரே
தாரணிபுகழ்மெய்யரே-தயைசெய்யவே (உம்மை)
பேரணிமகிமையெல்லாம்-பிறங்குமொலியேவல்லாய்
சீரணிசதக்கதுல்லா-சிறந்தநல்லாய் (உம்மை)
மெய்யகம்பரவும்மீது-மேவியகவிதையோது
செய்யிதுமுகம்மது-ஜயஞ்சேரவே (உம்மை)

---

செய்யிதுமுகம்மது புகாரிதங்கள் அவர்கண்மீது வருவாய்சண்முகனே என்றமெட்டு.

பல்லவி.

வருவீர்சற்குருவே-வரமருவும்புகாரி-வரு

அநுபல்லவி. சரணங்கள்.

தருவாய்ச்சிறந்தபுகழ் தங்குமென்குருநாதரே
ருவாய்வந்துதித்தோரே வளமருளும்போதரே (வரு)
அலவாயடங்கவுரை யருளுமென்றிருவாசரே
மலையாதருளுமதி வதனவிசுவாசரே (வரு)
பார்மீதிலெனதரும் பவத்திற்கோரளவுமுண்டோ
ஊர்வாயைமூடிதற்கே யுலைமூடி தானுண்டோ (வரு)
ஆழிவாய்த்துரும்புபோ லலையவிட்டீரேயையரே
ஊழிகாலமுழுதும் ஓங்கும்புகழ்புகாரி (வரு)
மெய்யாயுமதடியோர் விசனமடையவசமோ
செய்யிதுமுகம்மதை ஜயமருளும்புகாரி (வரு)

ஆசைமன்னவா வென்றமெட்டு

பல்லவி.

ஆசைநெஞ்சமே-பொல்லா-ஆசைநெஞ்சமே-பயந்
தஞ்சிடுவாயென்றுந் துஞ்சிடுவோமென்றே (ஆசை)

அநுபல்லவி.

ஆசைபாசந்தன்னை நேசமதாகவே
மோசமிகும்பிர யாசையெடுத்தபே (ராசை)

சரணங்கள்.

என்னசெய்குவாய் - பின்பு - என்னசெய்குவாய்-அன்று
எவரிடஞ்சென்று தவம்புரிகுவாய் (என்ன)
மன்னுயிர்கொல்ல மறலிசெல்லவே
உன்னுயிர்தனக் குதவியார்சொல்லு (ஆசை)

வருந்தலாகுமோ - கெஞ்சி - வருந்தலாகுமோ-செத்தால்
மருவு-மெய்யுயிர் வரவும்போகுமோ (வருந்)
பொருந்துமுயிரெம் மருந்தினலினு
மிருந்திடாதெனத் தெரிந்துமேவிய (ஆசை)

துன்பந்தீருமோ - மனத் - துன்பந்தீருமோ-வுடற்
சுழன்று-குழியிலழுகமாறுமோ (துன்பம்)
என்புதோலுட லிறந்துபோவது
தென்புதானெனத் தெளிந்துமீறிய (ஆசை)

காதல்பூணுவாய் - இங்கே - காதல்பூணுவாய்-படும்
கஷ்ட-மெல்லாம்பர னிஷ்டமதேயென்று (காத)
வாதுவல்வினை யேதுமுன்னக
பீதுநீவியெப் போதுமேவிய (ஆசை)

முற்றிற்று.

தன்னிகரில் லாமறையே தழைத்தோங்க மத்ரசதுல் ஜமாலிய் பாவை, மன்னியதி லெங்காரு மிகுபேருக் கன்னமொடு மருவும் யாவும், வின்னமில்லா தளித்துதவி வேதமுறை பயிற்றி வைக்கும், விமலரான, மன்னவர்கள் புகழும்ஜமால் முகியித்தீன் சாகிபுநீர் வாழி [illegible]தோ. (8)

தேசமெல்லாம் புகழாடு துறைபெரம்பூ ரிவைகளிலே சிறந்த பள்ளி, வாசவொன்றி ரண்டுகட்டி வைத்ததனால் வளர்மகிமை மருவுந் தூய, நேசமிகு முயர்பதியை வாங்கியவுந் நீர்மையையார் நிகழ்த்த வல்லார், வாசமிகும் வரதஜமால் முகியித்தீன் சாகிபுநீர் வாழி மன்னே. (9)

ஒன்றாத வுலகமிசை யுமதுரிய பெரும்புகழே யொளிறு மாறு, ஒன்றானபெரு மிறைவனருளாலு முயர்ந்தோர் களுரை களாலும், குன்றாத மறுமையிலுங் கோமானின் றிருவலமுன் குலவி வாழ்க, பொன்றாத துதிகொள்ஜமால் முகியித்தீன் சாகிபிறைபுரிக ஆமீன். ()

---

தரு.

சோபனம்-சோபனம்-சோபனமே-சுப-சோபனம்-சோபனம்சோபனமே குல-தாபரமாகும் ஜமாலுமுகியித்தீன் சாகிபுவாழ்ந்திட சோபனமே. (சோ)

ஆதிமுதல்வனருளோதுமறைவளர-ஆவியுடல் பொருளெல்லாமதற்கே, சாதித்துதவியஜமாலுமுகிய்யித்தீன் - சாகிபுவாழ்ந்திடசோபனமே. (சோ)

அந்தரம்புவனமெல்லாமருள்தரவரும் - ஆதிஅகுமதர்பா லோதியதை, சந்ததம்வளர்க்கும்ஜமாலுமுகிய்யித்தீன் சாகிபுவாழ்ந்திடசோபனமே. (சோ)

வாருதிசூழ்புவியோர்புகழ்தரவரு மத்ரசாஜமாலிய்யா வளர்தரவே, தாரணிபுகழும் ஜமாலுமுகிய்யித்தீன் - சாகிபுவாழ்ந்திடசோபனமே. (சோ)

காலமுழுதுமநுகூலம்விளக்கவரும்-கருணையங்கடலெனவந்துதித்தோர், சாலவருள்பெறும்ஜமாலுமுகியித்தீன் சாகிபுவாழ்ந்திட சோபனமே (சோ)

ஆதிதன்றிருப்பணியேதமதாகவே-யகிலமெல்லாமறைவளர்க்கவந்தோர், கோதகன்றிடவரும்கொழும்பாலிம்சாகிபு-கோமானும்வாழ்ந்திட சோபனமே. (சோ)

ஆதவனிகர்தரும்வேதமறைபொருளின்-ஆனந்தமாமமுதூட்டிவைப்போர். சாதுமுகம்மதுமதார்ஆலிம்சாகிபு - சற்சனர்வாழ்ந்திட சோபனமே (சோ)

வேதமுழுதுமறிந்தோதுந்தகுதியுள்ள-விமலசிகாமணியெனவிளங்கும், நீதமுகம்மதுபகுறுத்தீன்ஹலரத்தும்-நித்தமும்வாழ்ந்திடசோபனமே. (சோ)

அல்லும்பகலுமறைசொல்லுந்தகுதியுள்ள-அண்ணலர்சுல்தானகுதென்னும், நல்லவராகியவெங்களின்ஹலரத்தும்-நாளுமேவாழ்ந்திட சோபனமே (சோ)

மகிதலம்புகழிந்தமதுரசாத்னில்வந்து - வணக்கவொழுக்கமுற்றைபயிலுகின்றோர், தகுதிபெருகுமுயர்தாலிபுல்இல்முகள்-தற்பரனருள்பெற சோபனமே (சோ)

பூசிதரெனவரும் யூசுபுசாகிபும் புகழ்சொல்லும்செய்யிது முகம்மதொடு, தேசமுழுதும்புகழ் வீசியமுஸ்லீம்கள் - சீர்பெறவாழ்ந்திட சோபனமே. (சோ)

---

## (அறிவிப்பு.)

கீர்த்தனுமாலிகை கீழ் காட்டப்படுகிறவர்களிடம் ரொக்கத்திற்கு வி-பி-மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம் ஸ்ரீமாந்-சி-கா-வ வரிசைமுகம்மது ஆ 12-13 சாப்புக்கடை குருணக்கல் சிலோன்.

ம-ா ா-ஸ்ரீ-ப-க-செ-செய்யிது முகியிதீன் ஆ 64-நீசாப்புக்கடை சம்மாங்கோடு கொழும்பு.

ஸ்ரீமத்-க-செ அகுமதுஜலாலுத்தீன்சாகிபு ஆ பிடவைக்கடை தட்டார்தெரு கீழக்கரை.

கனம்-பி-ச-கா-வரிசையிபுறுகீம்ஆ வடக்குத்தெரு கீழக்கரை.

மௌலவி து ப-அப்துல்காதிறு ஆலிம்சாகிபு ஆ கம்பெனி 14 மண்ணடி சென்னை.

---

இந்தக்கீர்த்தனுமாலிகையுடைய இராகதாளங்களை யறிய விருப்பமுள்ளவர்கள் கீழக்கரை வடக்குத்தெரு மதுரசாவிலிருக்கும் ஸ்ரீமத், சேகுமுகம்மது ஆலிம்சாகிபு அவர்களிடத்திலும் ஷை யூர் ஷை தெருஸ்ரீமத்-சே-முகம்மது சதக்கத்துல்லாபுலவரவர்களிடத்திலும் ஷை யூர் ஷை தெரு-பி-ச-கா-வரிசையிபுறுஹீம் அவர்களிடத்திலும் ஷை யூர் ஷை தெரு-செ-கா-காதிறு இபுறுஹீம்சாகிபு அவர்களிடத்திலுந் தெரிந்து கொள்ளலாம்

---

ஸ்ரீமத் மௌலவி-து-ப-அப்துல்காதிறு ஆலிம்சாகிபுஆ கம்பெனி 14-மண்ணடி மதுராஸ் - இதில் குர்ஆன்சரீபு, அறபுகிதாபு, அறபுதமிழ்க்கிதாபு, தமிழ்ப்புத்தகங்களும், மருந்துச்சாமான்களும், வாசனைச்சாமான்களும், சுகந்த மூக்குத்தூள்முதலியனவும் ரொக்கமாகவும் வி பி-மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம் விலை சகாயம் அவர்களுடைய கேட்லாக்கில் காணப்படாத கிதாபு புத்தகம் மருந்துச்சாமான்கள் வாசனைச்சாமான்கள் சுகந்தமூக்குத்தூள் ஜர்மன் சில்வர் நகைகள்முதலியவைகளை மற்றவர்களுடைய கேட்லாக்கிற் கண்ட விலைக்கே திறமானதாகவும் நல்லதாகவும பார்த்துத்தெரிந்து வாங்கி அனுப்புவார்கள் சாமான்காரரிடம் அவர்களுக்குக் கமிஷன் வாங்கிக் கொள்வார்கள்.